**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்**

தேதி : 29.04.2026 – புதன் கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, உத்தரப்பிரதேச மாநிலம் ஹர்தோயி-யில் 594 கிலோமீட்டர் நீளமுள்ள 'கங்கா விரைவுச் சாலையை' திறந்து வைத்தார்.

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இத்தாலியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் Guido Crosetto-வுடன் நாளை புதுடெல்லியில் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

மேற்கு வங்க சட்டப் பேரவைத் தேர்தலில், ஏழு மாவட்டங்களைச் சேர்ந்த 142 தொகுதிகளுக்கு, 2ஆவது மற்றும் இறுதி கட்ட வாக்குப் பதிவு இன்று நடைபெற்றது.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் 136-வது பிறந்தநாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது.

***மோடி உத்தரப்பிரதேசம் -1 (4)***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது உத்தரப்பிரதேச மாநிலத்திற்கான 2 நாள் பயணத்தின் 2ஆம் நாளான இன்று, ஹர்தோயில் 594 கிலோமீட்டர் நீளமுள்ள 'கங்கா விரைவுச் சாலையை' திறந்து வைத்தார். இது குறித்த கூடுதல் தகவல்கள்…

(வாய்ஸ்)

***மோடி உத்தரப்பிரதேசம் -2 (14)***

(வாய்ஸ்)

36 ஆயிரத்து 230 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆறு வழித்தடங்களைக் கொண்ட இந்த கங்கா விரைவுச் சாலை, மீரட், ஹப்பூர், புலஞ்சகர், சம்பல், ஷாஜகான் பூர், உன்னாவ் உள்ளிட்ட 12 மாவட்டங்கள் வழியாக மீரட்டை பிரயாக்ராஜ்-உடன் இணைக்கிறது. இது அம்மாநிலத்தின் மிக நீண்ட சாலையாகும். இந்த நெடுஞ்சாலை மூலம் மீரட் – பிரயாக்ராஜ் இடையேயான பயண நேரம் 12 மணி நேரத்தில் இருந்து 6 மணி நேரமாக குறையும்.

ஷாஜகான்பூரில், மூன்றரை கிலோமீட்டர் நீளத்தில் இந்திய விமானப்படையின் விமானங்கள் அவசர காலங்களில் தரையிறங்க ஓடுதளமாக பயன்படுத்தும் வகையில், கங்கா விரைவு நெடுஞ்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

கங்கா அதி விரைவு நெடுஞ்சாலையை திறந்து வைத்து உரையாற்றிய பிரதமர் திரு. மோடி, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நம்

நாட்டின் உயிர் நாடியாக கங்கை நதி திகழ்வதைப் போல இந்த நவீன காலத்தில், இந்த விரைவுச் சாலையும் உத்தரப்பிரதேச மாநில வளர்ச்சியில் முக்கிய உயிர் நாடியாக மாறும் என்று கூறினார்.

***மோடி உத்தரப்பிரதேசம் - 3 (15)***

சில நாட்களுக்கு முன்பு டெல்லி - டேராடூன் விரைவுச் சாலையை தாம் திறந்து வைத்ததை நினைவு கூர்ந்த பிரதமர், இத்தகைய விரைவுச் சாலைகள் இந்தியாவின் ஒளிமயமான எதிர்காலத்தின் வெற்றியை நிர்ணயிப்பதாகவும் தெரிவித்தார்.

உத்தரப்பிரதேச மாநிலம் ஹர்தோயியில் கங்கா விரைவுச் சாலை திறக்கப்படுவதற்கு முன்னதாக, பிரதமர் மரக்கன்று ஒன்றையும் நட்டு வைத்தார். பின்னர், கங்கா விரைவுச் சாலை கண்காட்சியையும் பார்வையிட்டார்.

முன்னதாக, இன்று காலை, பிரதமர் காசி விஸ்வநாதர் ஆலயத்தில் சிவபெருமானை வழிபட்டார். அப்போது நாட்டின் அனைத்துக் குடிமக்களுக்கும் மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை அமைய வேண்டி, தாம் சிவபெருமானிடம் பிரார்த்தித்ததாகப் பிரதமர் சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். மேலும், காசி மக்களுக்கு தமது வணக்கங்களைத் தெரிவித்துக் கொண்டதுடன், ஆலய வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள 'விக்ரமாதித்ய வேத கடிகாரத்தையும்' பிரதமர் பார்வையிட்டார்.

*ராஜ்நாத் சிங் (13)*

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இத்தாலியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் Guido Crosetto-வுடன் நாளை புதுடெல்லியில் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இந்தச் சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான பல்வேறு விஷயங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதிக்க உள்ளதாக, பாதுகாப்பு அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. மாறிவரும் பாதுகாப்புச் சூழலுக்கு இடையே, பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் இரு தலைவர்களும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

2023 ஆண்டு திரு. ராஜ்நாத் சிங், மேற்கொண்ட ரோம் பயணத்திற்கு பிறகு, இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு மேலும் வலுப் பெற்றது. இத்தாலியப் பாதுகாப்பு அமைச்சர் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

*ஜெய்சங்கர் (11)*

உலகில் தற்போது நிலவும் பதற்றம் மற்றும் கொந்தளிப்பான சூழலில், தேசிய நலனை முன்னெடுத்துச் செல்லவும், தேசிய இலக்குகளைப் பாதுகாக்கவும் இந்திய ராஜதந்திரம் தயாராக உள்ளது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார். இன்று புதுடெல்லியில் நடைபெற்ற 11வது தூதரகத் தலைவர்கள் மாநாட்டில், இந்தியாவின் உயர் ஆணையர்கள், தூதர்கள் மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளிடையே அவர் உரையாற்றினார். கடந்த பத்தாண்டுகளில் உலக நாடுகளுடனான இந்தியாவின் நல்லுறவு கணிசமாக விரிவடைந்துள்ளது இந்த கலந்துரையாடலின்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் தமது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

*பியூஷ் கோயல் (14)*

காலநிலை மாற்றம் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எட்டி சிறப்பாக செயல்படும் நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதாக, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் காலநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்வது தொடர்பான கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், காலநிலை மாற்ற செயல்திட்டம் தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான நிலைப்பாடாக உருவாகி உள்ளது என்று கூறினார்.

புத்தாக்க எரிசக்தி இலக்குகளை 8 ஆண்டுகளுக்கு முன்னதாகவே எட்டி, ஜி-20 நாடுகளில் தலைமைத்துவ நாடாக இந்தியா உருவெடுத்து உள்ளதாகவும், திரு. பியூஷ் கோயல் பெருமிதம் தெரிவித்தார்.

இந்தியா தற்போது 260 ஜிகா வாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனை கொண்டிருப்பதாகவும், அடுத்த 4 ஆண்டுகளில் 500 ஜிகாவாட் தூய்மை எரிசக்தியாக இதனை மேம்படுத்த இந்தியா உறுதி பூண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

***ஈக்குவடார் (12)***

ஈக்குவடார் வெளியுறவுத்துறை அமைச்சர் Gabriela Sommerfeld 3 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுடெல்லி வந்துள்ளார். இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அவரது இந்தியப் பயணம் இரு நாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஈக்குவடார் வெளியுறவுத்துறை அமைச்சர் Gabriela-வை சந்தித்து வர்த்தகம், விவசாயம் மற்றும் திறன்மேம்பாடு உள்ளிட்ட முக்கியத் துறைகளில் இரு நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து விவாதித்தார். இரு நாடுகளுக்கு இடையே திட்டங்களை செயல்படுத்துவதற்கான நிதி குறித்தும் ஒரு ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

***எல்பிஜி (6)***

மேற்கு ஆசியாவில் நிலவும் பதட்டமான சூழல் காரணமாக எல்பிஜி இறக்குமதி பாதிக்கப்பட்டு இருப்பினும், உள்நாட்டு எல்பிஜி விநியோகத்தில் எந்த இடையூறும் இல்லை. மேலும் வீட்டு உபயோக எரிவாயு விநியோகம் சீராக உள்ளதாகவும், மத்திய பெட்ரோலிய அமைச்சகத்தின் இணைச் செயலாளர் திருமதி. சுஜாதா சர்மா கூறியுள்ளார். மேலும், ஏப்ரல் மாதத்தின் முதல் 28 நாட்களில், 1.84 லட்சம் டன்னுக்கும் அதிகமான வணிக எல்பிஜி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

***மேற்கு வங்கம் -1 (5)***

மேற்கு வங்க சட்டப் பேரவைத் தேர்தலில் 2ஆவது மற்றும் இறுதி கட்ட வாக்குப் பதிவு இன்று நடைபெற்றது. ஏழு மாவட்டங்களைச் சேர்ந்த 142 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் பிற்பகல் 3 மணி நிலவரப்படி சுமார் 78.68 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளதாக, தெரிவிக்கப்பட்டுள்ளது. 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் குறித்த கூடுதல் தகவல்கள்…

(வாய்ஸ்)

***மேற்கு வங்கம் -2 (18)***

(வாய்ஸ்)

மேற்கு வங்கத்தில் இன்று நடைபெற்ற தேர்தலில் ஆயிரத்து 448 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி போட்டியிடும், பவானிப்பூர் தொகுதியிலும் இன்று வாக்குப்பதிவு நடைபெற்றது. இத்தொகுதியில், எதிர்கட்சித் தலைவர் திரு. சுவேந்து அதிகாரியை எதிர்த்து, செல்வி மம்தா போட்டியிடுகிறார். மேலும் நந்திகிராம் தொகுதியிலும் செல்வி மம்தா போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது. தமிழகம், கேரளம், அஸ்ஸாம், புதுச்சேரி மற்றும் மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் மே மாதம் 4ஆம் தேதி எண்ணப்பட உள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் அதிகாரிகளுக்கான தீவிர பயிற்சி முகாம், அம்மாநில தலைமை தேர்தல்

அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது. மாநிலம் முழுவதும் 62 வாக்கு எண்ணும் மையங்களில் பணியாற்றும் அவலுவலர்கள் இப்பயிற்சியில் பங்கேற்றனர்.

இதேபோல் புதுச்சேரி பிராந்தியத்தின் 23 தொகுதிகளில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி, லாஸ்பேட்டை பகுதியில் அமைந்துள்ள மகளிர் பொறியியல் கல்லூரி, மோதிலால் நேரு அரசு தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய 3 மையங்களில் நடைபெற உள்ளன. ***கால்பந்து சம்மேளனம் (9)***

விளையாட்டுப் போட்டிகளில் பிரதமர் திரு. நரேந்திர மோடி மிகுந்த ஆர்வம் காட்டி வருவதாக, சர்வதேச கால்பந்து சம்மேளனத் தலைவர் திரு. Gianni Infantino பாராட்டுத் தெரிவித்துள்ளார். சிக்கிம் மாநிலம் கேங்டாக்கில், திரு. மோடி கால்பந்து விளையாடும் புகைப்படத்தை சமூக வலைதளத்தில் அவர் பகிர்ந்து கொண்டுள்ளார். இத்தகைய விளையாட்டு போட்டிகளுக்கு ஊக்கம் அளித்து வரும் பிரதமரின் முயற்சிகளை பாராட்டும் வகையில், இந்த பதிவினை திரு. Gianni Infantino வெளியிட்டுள்ளார். சிக்கிம், மிசோரம், மணிப்பூர், மேகாலயா உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் கால்பந்து விளையாட்டு பிரபலமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

***பாரதிதாசன் (9)***

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் 136-வது பிறந்தநாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது. சட்டப்பேரவை எதிரில் அமைந்துள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு, துணைநிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் செய்தி மற்றும் விளம்பரத்துறைச் செயலர் திரு முகமது அசன் அபித், இயக்குநர் திரு சுரேஷ்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்தநாளையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

***ரங்கசாமி (11)***

100 சதவிகிதம் கல்வி அறிவு பெற்ற மாநிலமாக புதுச்சேரி திகழ்கிறது என்றும், குடும்பத்தில் அனைவரும் பட்டம் பெற்றவர்களாக இருப்பதாகவும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார். அவர் இன்று புதுச்சேரியில் உள்ள தனியார் மருத்துவக்கல்லூரியின் 12-வது பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராக கலந்துகொண்டு கல்லூரியில் பயின்ற 67 முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கு பட்டமும், புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் சார்பில் 12 பேருக்கு தங்கப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார்.

புதுச்சேரிக்கு நரம்பியல் நிபுணர்களின் தேவை அதிகம் என்பதால், மாணவர்கள் முதுகலை படிக்கும் போது நரம்பியலை தேர்வு செய்யுமாறு அறிவுறுத்தினார். கல்விக்கு அரசு முக்கியத்துவம் அளித்து கூடுதல் நிதியை ஒதுக்கியுள்ளதாகவும், வரும் காலங்களிலும் கூடுதல் நிதி ஒதுக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்தார்.

***ஜிப்மர் (5)***

மே 1ம் தேதி, மத்திய அரசின் விடுமுறை தினமான புத்த பூர்ணிமா தினத்தையொட்டி புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையின் புற நோயாளிகள் பிரிவு இயங்காது என்றும் அந்நாளில் OPD-க்கு நோயாளிகள் வருவதை தவிர்க்க வேண்டும் எனவும், ஜிப்மர் நிர்வாகம் தெரிவித்துள்ளது. எனினும் அவசர சிகிச்சைப் பிரிவு வழக்கம் போல் இயங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***சொத்து வரி (7)***

காரைக்கால் மாவட்டம் நிரவி கொம்யூன் பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வீடுகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு 2026-27 ஆம் நிதி ஆண்டிற்கான சொத்து வரி தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் தாங்கள் செலுத்த வேண்டிய வரிகளை உரிய முறையில் செலுத்தி, அரசு

வழங்கியுள்ள இந்தச் சேவையைப பயன்படுத்திக் கொள்ளுமாறு நிரவி கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் தெரிவித்துள்ளார்.

***வானிலை (5)***

வளிமண்டல காற்றழுத்த தாழ்வு காரணமாக நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நாளை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் ஓரிரு இடங்களில் வெப்ப நிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

***ஐபிஎல் (2)***

ஐபிஎல் கிரிக்கெட் போட்டித் தொடரில், இன்றிரவு 7.30 மணிக்கு மும்பையில் நடைபெற உள்ள ஆட்டத்தில், ஹைதராபாத் - மும்பை அணிகள் களம் காணுகின்றன.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, உத்தரப்பிரதேச மாநிலம் ஹர்தோயி-யில் 594 கிலோமீட்டர் நீளமுள்ள 'கங்கா விரைவுச் சாலையை' திறந்து வைத்தார்.

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இத்தாலியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் Guido Crosetto-வுடன் நாளை புதுடெல்லியில் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

மேற்கு வங்க சட்டப் பேரவைத் தேர்தலில், ஏழு மாவட்டங்களைச் சேர்ந்த 142 தொகுதிகளுக்கு, 2ஆவது மற்றும் இறுதி கட்ட வாக்குப் பதிவு இன்று நடைபெற்றது.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் 136-வது பிறந்தநாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது.